

விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் ‘இந்தியா’ கூட்டணி கட்சி செயல்வீரர்கள் கூட்டம் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது, அருகில் வேட்பாளர் துரை.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் உதய சூரியன், மணிக்கண்ணன், கூட்டணி மாவட்ட நிர்வாகிகள், திமுக நிர்வாகிகள் ஆகியோர் உடன் உள்ளனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் தொகுதிதிண்டிவனத்தில் விழுப்புரம் நாடாளுமன்றம் (தனி) தொகுதி இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும்விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வேட்பாளர் துரை ரவிக்குமாரை ஆதரித்து அக்கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் பானை சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் க. செல்வராஜ் எம்.எல்.ஏ. தலைமையில்

# அவிநாசி சட்டமன்றத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிறப்புரை!

திருப்பூர், ஏப்.3-

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்தியா கூட்டணி அவிநாசி சட்டமன்ற தொகுதியின் தோழமை இயக்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் அவிநாசி குலாலர் திருமண மண்டபத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மற்றும் சாமிநாதன், கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர், இந்தியா கூட்டணி நீலகிரி நாடாளுமன்ற கழக வேட்பாளர் ஆ.ராசா ஆகியோர் தேர்தல் பணியாற்றுவது குறித்து உரையாற்றினர். இதில் கழக பொறியாளர் அணி செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் கருணாநிதி, கழக மருத்துவர் அணி துணை செயலாளர், அவிநாசி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கோகுல் கிருபாசங்கர், மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன், பொருளாளர் சு.சாமிநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.சரவணன் நம்பி, மாவட்ட கவுன்சிலர்கள் அன்னூர் இ.ஆனந்தன், ஆ.அபிநயா ஆறுக்குட்டி, தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர் அன்னூர் ஆர்.நடராஜன், ஒன்றிய கழக செயலாளர்கள் திருப்பூர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஈ.ப.சிவப்பிரகாஷ் அவிநாசி, எஸ்.ஆர்.பழனிசாமி திருமுருகன் பூண்டி, க.பால்ராஜ் சேவூர், என்.பழனிச்சாமி அன்னூர் வடக்கு, மு.தனபாலன் அன்னூர் தெற்கு, திருமுருகன் பூண்டி நகர கழக செயலாளர் மூர்த்தி (எ) கிருஷ்ணசாமி, பேரூர் கழக செயலாளர்கள் திராவிடன் வசந்தகுமார் அவிநாசி, இரா.பரமேஸ்வரன் அன்னூர், திருப்பூர் வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி அவிநாசியப்பன், திருப்பூர் வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பெரியார் காலனி எம்.எஸ்.மணி, கோவை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அம்பாள் ஆ.நந்தகுமார், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.டி.என்.விவேக், திருமுருகன் பூண்டி நகர் மன்ற தலைவர் நா.குமார், அவிநாசி பேரூராட்சி தலைவர் தனலட்சுமி பொன்னுசாமி, திருப்பூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் வெ.ராதாகிருஷ்ணன், பொதுக்குழு முன்னால் உறுப்பினர் சிவபாலன், அன்னூர் பேரூராட்சி துணைத் தலைவர் கே.விஜயகுமார், அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் மு.சிவக்குமார், மாவட்ட நெசவாளர் அணி முன்னாள் அமைப்பாளர் சு.செல்வரங்கம், ஒன்றிய முன்னாள் அவைத் தலைவர் என்.பி.ராஜேந்திரன், இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில், திராவிடர் கழகம் மாவட்ட காப்பாளர் ராமசாமி, மதிமுக,. மாவட்ட செயலாளர் கே.மணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சண்முகம், பொன்னுசாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முத்துசாமி, ஈஸ்வரமூர்த்தி, இந்திய தேசிய காங்கிரஸ் சரவணக்குமார், தங்கமுத்து, லட்சுமணசாமி, மதிமுக சுப்பிரமணியம், கோவிந்தராஜ், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி சுகுமார், குமார், ராயப்பன், ஸ்ரீதர், கணேசன், விடுதலை சிறுத்தைகள் கட்சி பழ.சண்முகம், ரங்கசாமி, கே.குமார், நக்கீரன் வெங்கடாசலம், ஆதித்தமிழர் பேரவை விடுதலை செல்வன், மணி, ரங்கசாமி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சிராஜ், அப்பாஸ், மனிதநேய மக்கள் கட்சி அபுஷாலிக், சாகுல் அமீது, ரஹ்மத்துல்லாஹ், பார்வர்டு பிளாக் கட்சி தாமோதரன், மக்கள் நீதி மய்யம் சந்திரதாஸ், சுரேஷ், தமிழ்ப் புலிகள் சுரேஷ் குமார், ஆதிதமிழர் பேரவை கசீனிவாசன், மற்றும் இந்தியா கூட்டணியின் அவிநாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது : நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் கழக வேட்பாளராக போட்டியிடுகின்ற ஆ.இராசா கழகத்தின் துணை பொதுச் செயலாளராகவும், ஒன்றிய அரசின் முன்னாள் அமைச்சராகவும், பல்வேறு பணிகளை சிறப்பாக பணியாற்றியுள்ளார். அன்புக்கினிய ஆ.இராசாவின் வெற்றிக்காக திருப்பூர் மாவட்டத்துக்குட்பட்ட அவிநாசி தொகுதியில், இந்திய கூட்டணியின் சார்பில் அனைத்து இயக்கங்களும் எவ்வாறு தேர்தலில் பணிபுரிய வேண்டும் என்கிற ஆலோசனை கூட்டத்தில் தோழமை கட்சியினர் சிறப்பாக பேசியுள்ளனர். இங்கே உள்ள நிர்வாகிகள் பல தேர்தல்களை சந்தித்து, அனைத்தும் அறிந்த அனுபவசாலிகள். ஒவ்வொரு தலைமைக் கழகத்திலிருந்தும் ஒரு பொறுப்பாளர்களை நியமித்து, தேர்தல் பணிகளை செய்வதற்காக தி.மு.கழகத்தின் சார்பில், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியில் ஒரு பொறுப்பாளர்கள் மூலமாக தேர்தல் பணிகளை செய்து கொண்டிருக்கின்றனர். இதேபோல மாவட்ட தோழமைக்கட்சியை சார்ந்தவர்கள் சார்பில் மாவட்ட அளவில் ஒரு குழு அமைந்திருக்கும். சட்டமன்ற தொகுதி சார்பிலும், ஒன்றிய, நகர வாரியாகவும், தி.மு.கழகத்தின் சார்பிலும் வாக்குசாவடி பாகநிலைக் குழு கமிட்டி அமைத்திருக்கிறோம், ஒன்றிய, நகர செயலாளர்கள் மூலமாக உடனுக்குடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும். வாக்கு சாவடிக்குழுவினர், அந்தந்த பகுதியில் உள்ள தோழமை கூட்டணி கட்சி நிர்வாகிகளை அணுகி, ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

ஆ.இராசா பேசியதாவது: இந்திய ஜனநாயகத்தை காப்போம், மதச் சார்பின்மையை காப்போம், அரசியல் சட்டத்தை காப்போம், என்கிற ஒரே கோட்பாட்டில், கொள்கையில் இணைந்து இந்தியா கூட்டணிக் கட்சியினர் அனைவரும் ஒன்றுபட்டு பாடுப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். இன்றைய இந்தியா எப்படிப்பட்ட ஆபத்தில் இருக்கிறது என்பதை வாக்காளர்களுக்கு சொல்லி, சவாலான சூழ்நிலையை, எப்படி நாம் சம்மாளிக்கப் போகிறோம்? என அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி வாக்குகளை சேகரியுங்கள். இந்த தேர்தல் நான் சந்திக்கிற 8 வது தேர்தல், இந்த 8 தேர்தலில் நாளுக்கு நாள் எப்படி தேர்தல் உத்திகள் மாறியிருக்கிறது என ஒவ்வொரு நிர்வாகிகளும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். தொழில்நுட்ப ரீதியாக களத்தில் நாம் எதிர் கொள்ளவேண்டிய நிலையில், தற்போதைய தேர்தல் உத்திகள் உள்ளன. பல்வேறு மாநில முதல்வர்கள் மோடி ஆட்சியை எதிர்ப்பதற்கு, துணிவு இல்லாமல் உள்ளனர். காரணம் ஈடி, ஐடி, மற்றும் சி.பி.ஐ. ரெய்டு தான். ஆனால் இவை அனைத்துக்கும் பயப்படாத ஒரே தலைவராக, தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணா நிதி ஸ்டாலின் அவர்களின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. பிரதமர் எங்கு வேண்டுமானாலும் பொய் சொல்லலாமா? அதுவும் முதமைச்சரிடம் பொய் சொல்லலாமா? எனக்கு தெரிந்த வரை முதலமைச்சரிடம் பொய் சொன்ன ஒரே பிரதமர் மோடி தான். நாடாளுமன்றத்தில் எனது 30 வது வயதில் தேவகவுடா, வாஜ்பாயி, மன்மோகன் சிங் உள்ளிட்ட பிரதமர்களுடன் நான் பணியாற்றியிருக்கிறேன். அத்தனை பிரத மர்களும் கேள்வி நேரத்தில் பாராளுமன்றத்திற்கு வந்து இருந்து, உரிய பதில் அளித்துள்ளனர். கேள்வி நேரத்தில் பிரதமர் இருக்க வேண்டியது கட்டாயம். மேலும், நேர்த்தியாக பதில் சொல்லும் ஆற்றலும் பெற்றிருக்க வேண்டும். மணிப்பூர் கலவரம், கொலை, முஸ்லீம்கள் கற்பழிப்பு ஆகியன குறித்து பிபிசி யில் கூறுகிறார்களே என்று கூறினாலும், நாடாளுமன்றத்துக்கு வந்து பதில் சொல்ல பிரதமர் வருவதில்லை. அரசியல் சட்டத்தை காப்பாற்றுவேன் என உறுதியெடுத்து பொறுப்பேற்ற பிரதமர் அரசியல் சட்டத்தை காப்பாற்றுவதில்லை. உத்தரப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே 100க்கு 35 பேர் உள்ளனர். குஜராத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே 100க்கு 26 பேர் உள்ளனர். கேரளாவில் 11 பேரும், தமிழ்நாட்டில் 12 பேரும் மட்டுமே உள்ளனர். மனிதனை நேசி” என்று கூறிய பெரியார் வாழ்ந்த நமது தமிழ் மண்ணில் 12 சதவீதம் பேர் மட்டுமே வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளனர். மத வெறிய தூண்டி இந்த நாட்டில் கிறிஸ்துவர்கள், இஸ்லாமியர்கள் இருக்க கூடாது என்பதை போன்று செயல்படுகின்றனர். மகாத்மா காந்தியும், ஜவகர்லால் நேருவும், கட்டிக்காத்து மனித நேயமும், மதச் சார்பற்ற நாடு என அறிவித்திருந்தனர். ஆனால், மத நல்லிணக்கத்தையும், மதச் சார்பின்மையையும் காலில் போட்டு மிதித்து, மதவெறியை தூண்டி, இந்தியாவை ஒரு மொழிக்கு கீழ், ஒற்றை ஆட்சிக்கு கீழ் கொண்டு வர வேண்டும் என துடிக்கும் இந்த ஒன்றிய அரசின் ஆட்சியை அனைவரும் எதிர்த்து வருகின்றனர். வளமான தமிழகம், வலிமையான பாரதம் மட்டுமல்ல, மத சார்பற்ற இந்திய தேசத்தை காப்பாற்றவும், மதசார்பற்ற ஆட்சியை அமைக்கவும் பாடுபடுகின்ற கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் குரலை வலுப்படுத்த உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து, நீலகிரி தொகுதியில் என்னை தேர்ந்தெடுத்து அனுப்புங்கள் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன் என்று பேசினார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம்ஆரணி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் இந்தியா கூட்டணி தி.மு.க. வேட்பாளர் தரணி வேந்தனை ஆதரித்து மயிலம் தொகுதி மயிலம் மத்திய ஒன்றியம் பேரணியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தாரை தப்பட்டைமேளம் வாசித்து நூதன முறையில் பொதுமக்களிடத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், செழியன் உள்ளனர்.

# குளித்தலை பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை!

## பெரம்பலூர் கழக வேட்பாளர் அருண் நேரு உறுதி!

பெரம்பலூர், ஏப். 3-

குளித்தலை பகுதிகளில் நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டை போக்கவும், மக்களுக்கு பொது சுகாதாரம், அரசு தொழிற்கல்வி கல்லூரி, விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என பெரம்பலூர் நாடாளுமன்ற திமுக வேட்பாளர் கூறினார்

பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் அருண் நேரு

பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட கரூர் மாவட்டம் குளித்தலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தோகைமலை ஒன்றிய பகுதிகளில் திமுக வேட்பாளர் அருண் நேரு தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது அவர் செய்தியாளர்கள் அளித்த பேட்டியில் குளித்தலை சட்டமன்றம் தோகைமலை ஒன்றிய பகுதிகளில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட போது பொதுமக்கள் பலரும் குடிநீர் மற்றும் விவசாய தண்ணீர் பிரச்சனையை பொது மக்கள் முதன்மை கோரிக்கையாக வைத்து வருவதாகவும், தேர்தலுக்குப் பின்னர் இதுகுறித்து நடவடிக்கை ஆய்வு பணிகள் மேற்கொண்டு காவிரி ஆற்றில் இருந்து பைப் லைன் மூலம் இப்பகுதி மக்களுக்கு எவ்வழியாக கொண்டு வந்து தண்ணீர் தர முடியும் என்பதை ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வேன் என்றும்,

மேலும் இப்பகுதியில் பொதுமக்கள் அரசு தொழிற்கல்வி கல்லூரி வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். மாணவர்களின் எதிர்கால நலன் கருதி இப்பகுதியில் அரசு தொழிற்கல்வி கல்லூரி அமைய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் போது சிறுகுறி தொழில் நிறுவனங்கள் தொடங்க நடவடிக்கை எடுப்பதாகவும்,

பொதுமக்களின் குடிநீர் பிரச்சினை இன்றி அவர்களின் பொது சுகாதாரம் முன்னுரிமை அளித்து கிராமப்புற பகுதிகளில் அரசு துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கவும், மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றும், குளித்தலை சட்டமன்ற தொகுதி விவசாயம் நிறைந்த பகுதியாக உனது நெல், கரும்பு,வாழை, வெற்றிலை உள்ளிட்ட பயிர்கள் அதிகளவில் பயிரிட்டு வருவதாகவும், வாழை மற்றும் வெற்றிலை குளிர்பதனை கிடங்கு அமைப்பதற்கு விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளதாகவும், மேலும் வெற்றிலை விவசாயம் செய்து வரும் விவசாயிகள் அந்த பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும்போது இன்சூரன்ஸ் தொகையை கூட பெற முடியவில்லை என கோரிக்கை வைத்ததாகவும் இது குறித்து சட்டமன்ற உறுப்பினர் மற்றும் கழக நிர்வாகிகள் பலரும் கோரிக்கை வைத்துள்ளதாகவும், வெற்றிலை பயிருக்கு இன்சூரன்ஸ் துடைக்க வழிவகை செய்தும் குளிர் பதன கிடங்குகள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும், கூறினார்

தொடர்ந்து திருச்சி கரூர் தேசிய நெடுஞ்சாலை மாயனூர் வரை நான்கு வழிச்சாலையாகவும், குளித்தலை வழியாக செல்லும் நெடுஞ்சாலை இரு வழிசாலையாக உள்ளதாகவும் இதனால் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட்டு வருவதால் நான்கு வழிச்சாலையாக விரிவு படுத்த நடவடிக்கை எடுப்பீர்களா என கேள்வி எழுப்பிய போது குளித்தலை வழியாக செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் ஒருபுறம் காவிரி ஆறும், மற்ற இடங்களில் பாசன வாய்க்கால்கள் இருப்பதால் விரிவு படுத்தும் பணியில் சிரமம் உள்ளதாகும் அதற்கு மாற்று வழி ஏற்பாடு செய்வதற்கு ஆய்வுகள் மேற்கொண்டு பஞ்சப்பூர் ரிங் ரோடு மற்றும் முக்கொம்பு பகுதியில் ரிங் ரோடு அமைக்க நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பேன் என்றும் கூறினார்.

பேட்டியின்போது எம் எல்ஏ மாணிக்கம் முன்னாள் எம்.எல்.ஏ., ராமர் தொட்டியம் ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, குளித்தலை சிவராமன், திருச்சி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி டாக்டர் கலையரசன் சேர்மன் துரைராஜ் கழக நிர்வாகிகள் பலரும் உடன் இருந்தனர்.



நாகை, திருவாரூர் மாவட்ட தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் நாகை நாடாளுமன்ற இந்தியா கூட்டணியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் வை.செல்வராஜுடன் சந்திப்பு கூட்டம் கீழ்வேளூர் ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் சிறப்புரையாற்றினர். உடன் இந்தியா கூட்டணியின் நாகை நாடாளுமன்ற தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வை.செல்வராஜ், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாள்Hகள் நாகை அ.பாரிபாலன், திருவாரூர் பா.அரவிந்த், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சிவகுருபாண்டியன் மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செ. மாதவன்

### ஏப்ரல் 3 (2018)



திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட இவர், கழகம் துவங்கிய போது, அதில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்.

1962லேயே சட்டமன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப் பட்டதுடன், கழகம் முதன்முதலாக பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க. அமைச்சரவை அமைந்த போது 9 பேர் கொண்ட முதல் அமைச்சரவையில் சட்டம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராக பதவி வகித்து, கழகக் கொள்கைகளான சுயமரியாதை திருமணச் சட்டம், ஜமீன் ஒழிப்புத் திருத்தச் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றியதோடு, கழக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட பல புரட்சிகரமான சட்டங்கள் வெளிவர முக்கிய காரணமாக இருந்தவர்.

அறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர், தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றபோது, அவரது அமைச்சரவையில் சட்டம் மற்றும் தொழில் ஆகிய துறை அமைச்சராக பதவி வகித்து தலைவர் கலைஞர் அவர்களின் எண்ணப்படி, தமிழகம் முழுவதும் 22க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை நிறுவி, தமிழகத்தில் தொழில் புரட்சியை ஏற்படுத்தி காட்டியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**